நிகழ்வின் தலைவர் கல்லூரி அதிபர் அவர்களே, பிரதம விருந்தினர் அவர்களே, அவர் தம் பாரியார் அவர்களே, சிறப்பு விருந்தினர் அவர்களே, கௌரவ விருந்தினர் அவர்களே, கல்லூரியின் பிரதி அதிபர் அவர்களே, மேடையில் அமர்ந்திருக்கும் பெரியோர்களே, நிகழ்விற்கு வருகை தந்திருக்கும் பெரியோர்களே, ஆசிரியர்களே, மாணவர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

எனது விடயத்தை ஆரம்பிப்பதற்கு முன்பதாக காரைநகர் தொடர்பான ஒரு முக்கியமான விடயத்தை தங்களிடம் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்பதாக இலங்கையில் மட்டக்களப்பில் ஒரு காரைதீவும் புத்தளத்தில் ஒரு காரைதீவும் தீவகத்தில் ஒரு காரைதீவும் இருந்தன. இந்நிலைமை அரச நிர்வாகத்திற்கு குறிப்பாக தபாற்சேவையில் பெரும் இடர்பாடுகளை ஏற்படுத்தியது. இதனால் அன்றைய பிரித்தானிய அரசாங்கம் மேற்குறித்த 3 காரைதீவுகளின் சமூக பொருளாதார மற்றும் குடிப்புள்ளியியற் பண்புகளை கருத்திற்கு எடுத்த போது நகரத்திற்குரிய பண்புகள் அதிகம் தீவகத்தில் அமைந்திருந்த காரைதீவு கொண்டிருந்தமையால் இத்தீவிற்கு காரைநகர் என்ற பெயர் கொண்டு அழைப்பதற்கான அரசாணையை வர்த்தமானி மூலம் பிரசுரித்தமையை தொடர்ந்து இத்தீவிற்கு காரைநகர் என்ற பெயர் 12.09.1923 இலிருந்து வழக்கில் வரலாயிற்று.

## காரைநகரின் கல்விப் பாரம்பரியம்

இலங்கைக்கு ஐரோப்பியரின் வருகைக்கு முன்பதாக கல்விச் செயற்பாடுகள் நடைபெற்ற பொழுதிலும் ஆவண ரீதியான ஆதாரங்கள் இன்றி செவிவழிச் செய்திகளே காணப்படுகின்றன. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் நடைபெற்ற கல்விச் செயற்பாடுகளை ஆவண ரீதியாக அறிய கூடியதாக உள்ளது.

காரைநகரில் அமெரிக்க மிஷனரிமார் காரைநகர் திருச்சபை ஆரம்பித்த 1855ம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தந்து கல்விப் பணிகளை ஆரம்பித்தனர்.

### காரைநகரில் அமெரிக்க மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள்

அமெரிக்கன் மிஷன் ஆங்கில பாடசாலை – **American Mission EnglishSchool**

ஆறு தமிழ்ப் பாடசாலைகள்

1. தங்கோடை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை
2. களபூமி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
3. காரை கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
4. ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
5. வலந்தலை தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை
6. வலந்தலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

அன்றைய காலகட்டத்தில் மிஷனரிமார் நடத்திய ஆங்கிலப் பாடசாலைகளில் கற்ற கிறிஸ்தவர்களுக்கும் ஏனைய மதத்தவர்களுக்கும் இலங்கையிலும் பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தின் குடியேற்ற நாடுகளான மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் வேலை வாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றது. இதன் காரணமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அமெரிக்கன்மிஷன் ஆங்கிலப் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டினா்.

ஐரோப்பிய அரசுகளால் உருவாக்கி நிருவகித்த பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் தமிழ் பாரம்பரிய முறையிலான கல்விச் செயற்பாடுகள் இலைமறைகாயாக வீறு குன்றாது நடைபெற்று வந்தன. காரைதீவிலும் இவ்வாறான கல்விச் செயற்பாடுகள் சைவ அபிமானிகளால் செயற்படுத்தப்பட்டு வந்தது.

## காரைநகரில் நிலவிய திண்ணைப் பாடசாலைக் கல்வி முறை

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஆசிரியரின் வீட்டுத் திண்ணையில் நடந்ததால் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எனப் பெயர் பெற்றது. ஒரு வீட்டுத் திண்ணையில் அல்லது மரத்தின் அடியில் மாணவர்கள் சப்பாணி கட்டி உட்கார்ந்து கற்றல் நடவடிக்கையில் ஈடுபடுவர். வகுப்புத் தலைவன் சட்டாம்பிள்ளை எனப் பெயரிடப்பட்டான். திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இயங்கியதன் மூலம் அன்று கல்வி கற்பதன் அவசியம், சிறப்பு என்பன உணரப்பட்டு இருந்தமையை அறிய முடிகின்றது.

பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக் கார்த்திகேயப் புலவர் அவர்கள் விரோதி கிருது வருடம் தை மாதம் (கி. பி.1852) ஒரு வித்தியாசாலையை உருவாக்கி கல்வி கற்பிக்கத் தொடங்கினார்.

திரு. நமசிவாயம் என்பவர் தலைமையில் மருதடியில் 1879 ஆம் ஆண்டு ஓர் திண்ணைப்பள்ளிக்கூடம் நடைபெற்றது. இதுவே பிற்காலத்தில் சுப்பிரமணிய வித்தியாசாலையாக மாற்றம் பெற்றது.

“விளானை களபூமி எனும் இடத்தில் ஞானியார் தில்லையம்பலம் எனும் பெரியவர் தமது வளவில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பித்து கல்வி புகட்டி வந்தார்.”

“திரு. புன்னன் போல் அவர்களின் மகன் திரு. ஐசாக் போல் திண்ணைப் பள்ளிக்கூடத்தை பழைய கண்டிச் சந்திக்கு அண்மையில் அமைந்திருந்த வீட்டில் நடாத்தினார்.”

“20 நூறற்றாண்டின் ஆரம்பத்தில் சடையாளி கிராமத்திலே வாழ்ந்த வர்த்தகரான சு.வே.சண்முகம் என்பவரது காணியில் திண்ணைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

“1925 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியில் திரு. மு.நல்லதம்பி (நல்லார்) சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீசிதம்பரேஸ்வரர் ஆலயத்தின் மேற்குப் பக்கத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றினை நடாத்தினார்.”

திண்ணைப் பள்ளிகூடங்களில் ஒன்று காரைநகர் கிழக்கில் கொட்டைப்புலம் (ஊரி) எனும் இடத்தில் சிறப்புடன் நடைபெற்று வந்தது. மாதரும் அவருடைய மகன் மாதமுருகரும் திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியாகளாக பணிபுரிந்தார்கள்.

# காரைநகரில் சைவ சமயச்சூழலில் கல்வி கற்பதற்கு பணி செய்தோர்.

**திரு. ச. அருணாசல உபாத்தியாயர்**

ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று அங்கீகரிக்கப்பட்ட அரச பாடசாலை ஒன்றில் ஆசிரியராகக் கடமையாற்ற கிறிஸ்தவராக மாற வேண்டும் என அமெரிக்க மிஷனரிமாரதும், பிரித்தானிய சாம்ராஜ்ஜியத்தினதும் கொள்கையையும் சவாலுக்கு உட்படுத்தி அவர்களுடைய மனநிலையில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தி சைவ ஆசிரிய கலாசாலை ஒன்றினை ஆரம்பிப்பதற்குப் பல தடவைகள் முயற்சி செய்து வெற்றி கண்டவர். சைவ சமய சூழலில் கல்வி செயற்பாடுகள் நடைபெற தன் வாழ்நாளை அர்ப்பணம் செய்தவர் அருணாசல உபாத்தியாயர். சமூகப் பணியாற்றுபவர்களுக்கான செல்நெறியை தன் வாழ்வின் பணி மூலம் வகுத்துச் சென்றவர்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, காரைநகர் இந்துக் கல்லூரி, வியாவில் சைவ வித்தியாசாலை ஆகிய பாடசாலைகளை அப்பாடசாலைகளின் சூழலில் வாழ்ந்த பெரியோர்களை ஊக்குவித்து ஆரம்பித்து வைப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர். யாழ்.குடாநாடு முழுவதும் நடைப்பயணங்களை மேற்கொண்டு தனவந்தர்களையும், பெருமக்களையும் சந்தித்துக் கிராமங்கள் தோறும் (10 பாடசாலைகளுக்கு மேல்) சைவப் பாடசாலைகள் தோற்றம் பெறுவதற்குக் காரணமானவர்.

**ஶ்ரீமான் முத்து சயம்பு**

சைவசமய சூழலில் ஆங்கிலம் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை விரைவாக நிறைவு செய்தமையால் பாடசாலை விரைவான வளர்ச்சியைக்கண்டது. சயம்பர் பாடசாலை என்ற பெயரையும் பெற்றது. மாணவர்கள் சமய நெறிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும், ஒழுக்க சீலர்களாக விளங்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருந்தார். சயம்பரின் மாணாக்கர் மலாய் நாடு சென்று பெரும் பொருள் சம்பாதித்தனர். இதனால் காரைநகரின் சமூக, பொருளாதார அந்தஸ்தை முன்நோக்கி நகர்த்தியவர் சயம்பர். அன்றும் இன்றும் சயம்பர் பள்ளிக்கூடம் காரைநகரில் ஒரு அறிவு சார் சமூகத்தை உருவாக்கும் அறிவாலயமாகத் திகழ்கின்றது.

**ஶ்ரீமான் சி. சுப்பிரமணியபிள்ளை**

ஶ்ரீமான் சி.சுப்பிரமணியபிள்ளை அருணாசல உபாத்தியாயரின் ஆலோசனையுடனும் அக்காலத்தில் கல்வியில் அக்கறையுடைய பெருமக்களுடனும் இணைந்து 1889 இல் சுப்பிரமணிய வித்தியாசாலையை ஆரம்பித்தார். இவர் பாடசாலைக்கு வேண்டிய நிலத்தையும் வகுப்புகள் நடத்துவதற்கு கட்டிடங்களையும் தளபாடங்களையும் வழங்கினார். இவர் 10 வருடங்களுக்கு மேலாக அங்கு கற்பித்த ஆசிரியர்களுக்கு வேதனங் கொடுத்து தாபரித்து வந்தார். கல்வியில் ஆர்வமுடையவர்களும் நிதியுதவி வழங்கி ஸ்தாபகரை ஊக்கப்படுத்தினர்.

**திரு. கந்தப்பர் சுப்பிரமணியம்**

களபூமியில் பிறந்து வாழ்ந்தவர். காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தை அப்பகுதி பெரியோர்களுடன் இணைந்து ஆரம்பித்தவர். திரு. ஆறுமுகம் சங்கரப்பிள்ளையுடன் இணைந்து பாடசாலைக் கட்டிடத்தைக் கட்டியவர். இவர் வள்ளி சுப்பர் என்றும் அழைக்கப்படுபவர்.

இன்றும் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தை வள்ளி சுப்பர் பாடசாலை என்று அழைக்கும் வழக்கம் உண்டு.

**திரு. ஆறுமுகம் சங்கரப்பிள்ளை**

களபூமியில் பிறந்து வாழ்ந்தவர். காரைநகர் சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயத்தை அப்பகுதி பெரியோர்களுடன் இணைந்து ஆரம்பித்தவர். திரு. கந்தப்பர் சுப்பிரமணியத்துடன் இணைந்து பாடசாலைக் கட்டிடத்தைக் கட்டியவர் 1936 முதல் 1954 வரை பாடசாலை முகாமையாளராக இருந்து பாடசாலைக்கு வேண்டிய உதவிகளை வழங்கி பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவியவர்.

**திரு. ஆறுமுகம் சண்முகம் சங்கரப்பிள்ளை**

காரைநகரில் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் பாடசாலை (காரைநகர் இந்துக் கல்லூரி), வியாவில் சைவ பரிபாலன பாடசாலை (திருநாவுக்கரசர் பாடசாலை), சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம் என மூன்று நாயன்மார்களுக்கும் பாடசாலை இருந்தமையால் மாணிக்கவாசகர் பெயரிலும் ஒரு பாடசாலை இயங்க வேண்டும் என்று எண்ணிய சங்கரப்பிள்ளை பாலாவோடையில் மாணிக்கவாசகர் வித்தியாசாலையை ஆரம்பித்து வைத்தார்.

**பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர்**

1890 ஆம் ஆண்டளவில் அருணாசல உபாத்தியாயரும், பிரம்மஸ்ரீ க. வேதக்குட்டி ஐயரும் இணைந்து சைவ பரிபாலன வித்தியாசாலை எனும் பாடசாலையை வியாவில் கிராமத்தில் ஸ்தாபித்தனர். பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயர் பாடசாலை ஆரம்பிப்பதற்கு தேவையான காணியை அன்பளிப்புச் செய்தார்.

## வர்தாக் கல்வித் திட்டம்

பாரத தேசத்தின் தேசபிதா மகாத்மா காந்தியின் சிந்தனையில் உருவாகியது வர்தாக் கல்வித்திட்டம். யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக காரைநகரில் 18.03.1949 இல் வர்தாக் கல்விக் கூடம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வர்தாக் கல்விக் கூடம் ஆயிலியில் அமைந்துள்ள கேணிக்கு அண்மிய பகுதியில் இயங்க ஆரம்பித்தது.

இப்பாடசாலையை ஆரம்பித்து வைப்பதில் முழு மூச்சுடன் உழைத்தவர் திரு. பொ. நவரத்தினம். திரு. நவரத்தினம் அவர்கள் எம். ஏ. நவரத்தினம் என எல்லோராலும் அழைக்கப்படுபவர்.

1960ஆம் ஆண்டு பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த பொழுது இப்பாடசாலை ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலையுடன் இணைக்கப்பட்டது.

மிசனரிமார்களால் நடாத்தப்பட்ட கிறிஸ்தவ பாடசாலைகள், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பாடசாலைகள், முகாமையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் இருந்த பாடசாலைகள் அனைத்தும் 1960, 1962ம் ஆண்டுகளில் அரச பாடசாலைகளாக்கப்பட்டன. அன்றைய கால கட்டத்தில் காரைநகரில் 1AB பாடசாலைகள் இரண்டு. தரம் 2 பாடசாலைகள் 2,

தரம் 3 பாடசாலைகள் 10 எல்லாமாக 14 பாடசாலைகள் இயங்கின. அவற்றில் காரை கிழக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை, இலகடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

1991ம் ஆண்டு ஏப்ரல் மாத இடப்பெயர்விற்கு முன்பதாக காரைநகர்ப் பாடசாலைகளில் 4951 மாணவர்கள் கல்வி கற்றனர். 135 ஆசிரியர்கள் சேவையில் இருந்தனர். இடப்பெயர்வின் போது 1993ம் ஆண்டு வரை அனைத்துப் பாடசாலைகளும் இயங்கின. 1993ம் ஆண்டுக்கு பின்னர் காரைநகரில் மீண்டும் குடியேறும் வரைக்கும் காரைநகர் இந்துக் கல்லூரி, யாழ்ற்றன் கல்லூரி, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், வலந்தலை தெற்கு அ.மி.த.க பாடசாலை, பாலாவோடை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகள் 25.04.1996இல் காரைநகரில் மீளக் குடியமர்வு வரை வலிகாமம், யாழப்பாணம் ஆகிய பகுதிகளில் இயங்கின. காரைநகரில் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை, காரைநகர் மகா வித்தியாலயம், யாழ்ற்றன் கல்லூரி கனிஷ்ட பிரிவு ஆகிய பாடசாலைகள் இயங்கின.

இந்த இடப்பெயர்வு காலத்தில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளிற்கு பாதகம் ஏற்படாத வகையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் இயங்கியமையால் அன்றைய கால கட்ட காரைநகர் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் சிறப்புற அமைந்திருந்தது.

## காரைநகரின் கல்விப் பாரம்பரியத்திற்கு காத்திரமான பங்களிப்பு வழங்கிய பெருமக்களில் ஒரு சிலரை குறிப்பிட விரும்புகிறேன்

பேராசிரியர் அல்லின் ஏபிரகாம் ஐரோப்பிய வானியலாளர்களின் கணிப்பை மிஞ்சி ஹேலிஸ் வால்வெள்ளி தோன்றும் காலத்தை சரியாக தெரிவித்தார். இதனைக் கௌரவிக்கும் முகமாக பிரித்தானிய மன்னரின் வானியற்கழக உறுப்புரிமை வழங்கப்பட்டது. F.R.A.S கௌரவத்தை பெற்ற முதலாவது இலங்கையரும் 8வது ஆசிய நாட்டவரும் அல்லின் ஏபிரகாம்.

சங்கநூற்செல்வர் பண்டிதர் சு.அருளம்பலம் 6 நூல்களை எழுதியவர். திருவாசகம் ஆராய்ச்சியுரை, பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை சாகித்திய மண்டல பரிசில் பெற்ற நூல்கள்.

கலாநிதி பொ. ரகுபதி யாழ்ப்பாணத்தின் ஆதிகால குடியிருப்புக்கள் பற்றி ஆய்வு செய்தவர். அவரின் ஆய்வின் மூலம் சத்திரந்தையில் காணப்பட்ட தொல் பொருட்கள் மூலம் காரைநகரில் பெருங்கற்கால பகுதியில் இருந்து மக்கள் வாழ்ந்திருந்தமையை அறியக்கூடியதாக இருக்கின்றது.

பண்டிதர் ச. வைத்தீஸ்வரக்குருக்கள் 10 புத்தகங்கள் எழுதினார். 14 புத்தகங்களை பதிப்பித்தவர்.

திரு வே. கணபதிப்பிள்ளை மாணவர் தமிழ் வாசகம் 1 இலிருந்து 5 வரை தமிழ் வாசகம் 7 ஆம் வகுப்பு வரை ஸ்ரீலங்கா றீடேர்ஸ் பிறிமியர் – IV ஆகிய நூல்களின் ஆசிரியர். ஒரு சகாப்த காலமாக இலங்கையில் உள்ள சகல தமிழ்ப் பாடசாலைகளிலும் மேற்படி நூல்களை பயன்படுத்துவதற்கு அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

திரு F.X.C நடராஜா 23 நூல்களின் ஆசிரியர். காரைநகர் மாண்மியம் எழுதியவர். மட்டக்களப்பு மாண்மியம் எனும் நூலை எழுதி சாகித்திய மண்டல பரிசு பெற்றவர்.

கலாநிதி செ.சுந்தரம்பிள்ளை 18 நூல்களின் ஆசிரியர். 4 நூல்கள் சாகித்திய மண்டல பரிசு பெற்றன.
திரு ச. பத்மநாதன் (பட்டுமாமா) 25 ஆண்டுகாலமாக வாரிவளவு நல்லியக்க சபை செயலாளராக இருந்து காரைநகர் மாணவர்களின் கல்வி, கலை, விளையாட்டு துறை மேம்பாட்டிற்காக அயராது தனி மனிதனாக உழைத்த பெருமைக்குரியவர்.

இன்றும் காரைநகரின் கல்விப் பாரம்பரியத்திற்கு பெருமை சேர்க்கின்ற விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், கவிஞர்கள், நூலாசிரியர்கள் எனப் பலர் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். அவர்களில் ஒரு சில பெரு மக்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.
திரு ஆறுமுகம் நல்லைநாதன் உலகின் தலைசிறந்த 115 விஞ்ஞானகிளில் ஒருவராக பணியாற்றுகின்றார்.
திரு அ. ஞானேஸ்வரன் கணினிக் கல்வி தொடர்பான 6 நூல்களை தமிழ் மொழி மூலம் இயற்றியுள்ளார்.
திரு நவரத்தினம் திருச்செல்வம் 38 நூல்களின் ஆசிரியர்.
திரு கந்தையா பத்மநாதன் 10 நூல்களின் ஆசிரியர்.
திரு வடிவேலு வடிவழகையன் முகிலெனக்கு துகிலாகும் எனும் நூலை எழுதி சாகித்திய மண்டல பரிவு பெற்றவர்.
அண்மைக்காலத்தில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களாக க.அகிலன், ச.பகீரதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.
புலம்பெயர்ந்து பல தேசங்களுக்கு சென்றவர்களினதும், இந்நாட்டிற்குள் இடம்பெயர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் வசிக்கின்றவர்களினதும் இரண்டாவது தலைமுறையின் கல்விப் பெறுபேறுகள் உயர்நிலையில் காணப்படுகின்றன. எனவே காரைநகரில் வாழ்ந்து, காரைநகரின் பாடசாலைகளில் கல்வி கற்கின்ற மாணவர்கள் கல்வியில் சமநிலை பெற்று உயர்நிலை அடையவேண்டுகின்றேன். இதுவே காரைநகரின் இருப்புக்கும் பெருமைக்கும் வலுச்சேர்கக்கும்.

1950, 1965 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான காலப்பகுதிகளில் தமிழில் கல்விப் போதனைகள் நடைபெற்றமையால் ஆங்கில மொழி அறிவின் தரம் வீழ்ச்சி கண்டது. இப் போதனை மாற்றம் மாணவர்களை உலகின் புதிய மாற்றங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பை இல்லாமல் செய்தது.

1970 களில் அமுல்ப்படுத்திய தரப்படுத்தல் உயர்கல்வி வாய்ப்பிற்கு தடைக்கல்லாயிற்று. இதனை அகற்றுமாறு போர் மூண்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காலப்பகுதியிலும் தமிழ் மாணவர்கள் உயர்புள்ளியின் அடிப்படையில் உயர் கல்விக்கு தெரிவாகினர். தற்போது போரின் பின் தமிழ் மாணவர்களிற்கு தரப்படுத்தல் தான் உயர்கல்வி வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

க.பொ.த உயர்தர கணித/விஞ்ஞான பாட நெறிகளை தெரிவு செய்து கற்பதில் மாணவர்கள் ஆர்வம் காட்டாமையால் கணித விஞ்ஞான பீடங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகின்றது. பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றது. ஒரு குறிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கையில் குறைந்து விடுவார்கள்.

தற்போது கல்வி கற்கும் மாணவர்களின் மனோ நிலைகளில் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு பின்னரான காலப்பகுதியில் ஆங்கிலத்தை கற்க ஆரம்பிக்கின்றார்கள். க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞானப்பிரிவில் கற்பதற்கான மனோநிலை மாணவர்களிடையே காணப்படவில்லை. கலை, வர்த்தகம், தொழினுட்பபிரிவில் கற்பதை விரும்பி கற்கின்றனர். க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான, கணித பாடங்களில் கற்பதனால் 30ற்கு மேற்பட்ட பாடநெறிகளுக்கு பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

1970ம் ஆண்டு காலப்பதியில் இருந்து தொடர்ந்து இடப்பெயர்வு வரை 200ற்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொத உயர்தரத்தில் இப்பாடசாலையில் கல்வி கற்றனர். வட்டுக்கோட்டை, மூளாய், சுழிபுரம் பகுதிகளிலிருந்து கல்வி கற்பதற்கு விசேடமாக உயர்தரத்தில் கற்பதற்கு இக்கல்லூரிக்கு மாணவர்கள் வருகைதந்தனர். மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், கலைப்பிரிவுகளுக்கு 10க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆண்டுதோறும் தெரிவுசெய்யப்பட்டனர். யாழ்ப்பாண நகரத்திற்கு வெளியே இயங்கும் முன்னணிப் பாடசாலைகளின் வரிசையில் காரைநகர் இந்துக் கல்லூரியும் இடம்பெற்றிருந்தது.

அண்மைக்காலங்களில் இக்கல்லூரியில் இருந்து மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் கலை,வர்த்தக, தொழில்நுட்ப பீடங்களுக்கு அனுமதி பெற்றுச் செல்வதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அண்மையில் பொறியியல் பீடத்திற்கு மாணவி ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இந்நிலமை இக்கல்லூரியின் கல்விப் பெறுபேறுகள் உயர்நிலமையில் இருப்பதையும்,கல்லூரிச் செயற்பாடுகள் நம்பிக்கை தருவனவாகவும்காட்டிநிற்கின்றது.

சகோதர மொழிமூலம் க.பொ.த உயர்தரத்தில் கற்பதற்கான மாதிரி வினாத்தாள்கள், துணைநூல்கள் அதிகமாக காணப்படுகின்றன. முஸ்லீம் மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்காக அவர்களின் சமூக, சமய ஸ்தாபனங்கள். தனிநபர்கள் உயர்கல்விக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி நிதி ஏற்பாடுகளையும் செய்துவருகின்றது.

தமிழ் சமூகத்தின் கல்வியாளர்கள் கற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதில் வினைத்திறனாக செயற்படாநிலை காணப்படுகின்றது. தமிழ் மக்கள் மத்தியில் இயங்குகின்ற பொது அமைப்புக்கள் தங்களிடையே சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறான சூழ்நிலைகளில் தமிழ் மாணவர்களின் கற்றல் ஊக்கத்தை திசைதிருப்பும் சக்திகளாக சமூகச் சீரழிவு நடவடிக்கைகளும், போதைவஸ்து ஆதிக்கமும் மேலோங்கிக் காணப்படுகின்றன. இந்நிலைமைகளில் இருந்து மாணவர்களை மீட்டெடுத்து வழிகாட்டி, நற்பிரசைகளாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய ஆசிரியர்களின் பணி கடந்தகாலங்களைப் போலன்றி கடினமான பணியாக உள்ளது. எனவே ஆசிரியர்களாகிய நீங்கள் சிறப்பான பணியை ஆற்றுவதனூடாக உங்கள் மாணவர்களின் மனங்களில் என்றென்றும் நிலைத்திருப்பீர்கள்.

Luck strike once a door. Unluck hangs at the door. மாணவர்களாகிய உங்களுக்கு மாணவப் பருவந்தான் அதிஷ்டம் கதவைத் தட்டும் காலம். இம்மாணவப் பருவத்தில் பெற்றோர்கள் ஆசிரியர்கள், சமூக நலன்விரும்பிகள் உங்கள் எதிர்காலத்தில் நீங்கள் வல்லவர்களாக வாழ்வதற்கு பல்வேறுபட்ட உதவிகளையும் தந்துதவிக் கொண்டிருக்கின்றனர். இவற்றை நீங்கள் நன்றாகப் பயன்படுத்தி நல்ல பிரஜைகளாக உருவாகி காரைநகரின் கல்விப் பாரம்பரியத்தை பேணிப்பாதுகாக்க வேண்டி விடைபெறுகின்றேன்.